Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம்௵ ஜூலை௴ 4௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 16

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

ஜெர்மனியிலும், வடக்கு பிரான்சிலும், பல முக்கியமான இடங்களில், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டு, சேதத்தை விளைவித்தன. ஜெர்மன் கடற்படைத் தளமாகிய கீல், பிரெமென் என்ற ஜெர்மன் துறைமுகப்பட்டணம், வில்ஹெல்ம்ஷேவன், கலோன், டூசல்தார்ப், ரூர் தொழிற்சாலைப் பிரதேசம, ரைன்லந்துப்பிரதேசம், விஜிசாக், எம்டன், கக்ஷேவன், ஹாம்பர்க், ஓல்டன்பர்க், டென்ஹெல்டென், டங்கர்க் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன.

கீல், பிரெமென் என்ற இரண்டு ஜெர்மன் கடற்படைத் தளங்களைப் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கியபோது, அவைகள் மின்சாரப் புயலில் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்பட்டன. இதுவரைக்கும் அப்படிப்பட்ட புயலில் தான் அகப்படவேயில்லை என்று ஒரு விமான ஓட்டி கூறினர். ஆனல் கூடிய சீக்கிரம் புயல் நின்றுவிட்டது; சுத்தமான ஆகாயம் தோன்றியது. வெடிகுண்டுகள் போட்டதன் பயனாக, கீல் கப்பற்சாலை நெருப்புப்பற்றிக்கொண்டது. அதிக உயரம் நெருப்புச் சுவாலைகள் எழும்பியதை ஆகாய விமானிகள் பார்த்தார்கள்.

கீலின்மேல் ஏராளமான வெடிகுண்டுகள் போடப்பட்டன கீல் தான் ஜெர்மனியின் பால்டிக் கடற்கரைப்பாதுகாப்பின் தலைமை ஸ்தானம். வடக்கே ரஷ்யாவைத் தாக்குவதற்கு, முக்கிய கடற்படைத் தளமாகக் கீல் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

ஜெர்மனியின் தொழிற்சாலைப் பிரதேசங்களை தொடர்ச்சியாக 16 இரவுகளில் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின என்று தெரிகிறது. 250-முதல் 400 விமானங்கள் ஒரு பெரும்படையாக ஒரே சமயத்தில் சென்று ஜெர்மனியின் முக்கியமான லட்சியங்களின்மேல் வெடிகுண்டுகளைப்போட்டன.

வடக்கு பிரான்சைப் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கியதைப்பற்றி, பிரிட்டிஷ் விமான மந்திரி சபை ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கை கூறுவதாவது :—இங்கிலீஷ் கால்வாய் மேலும், வடக்கு பிரான்சின்மேலும், பிரிட்டிஷ் விமானங்கள் பறந்து முன்னேறிச்சென்று, ஜெர்மன் போர் விமானங்களோடு சண்டையிட்டன. ஜெர்மன் விமானங்களில் 9 சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரிட்டிஷ் விமானங்களில் 3 இழக்கப்பட்டன.

ஜெர்மனியையும், பிரான்சையும் ஆகாய மூலமாகத் தாக்குவதற்கு, கடைசியாக நிர்மாணிக்கப்பட்டதும், புதியமாதிரியானதுமான பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் உபயோகப்படுத்தப்பட்டன.

வடக்கு பிரான்சில், போலிஷ் ஆகாய விமானங்கள் மூன்று ஜெர்மன் விமானங்களைச்சுட்டு வீழ்த்தின. பலோன் என்ற இடத்தை பிரிட்டிஷ் விமானங்கள் பலமாகத்தாக்கின. அவைகளைத் தடுத்துப் போர் புரிய அதிகமான விமானங்கள் வரவில்லை என்றும் உள் நாட்டில் இருக்கும் ஜெர்மன் விமானங்கள் மிகக் குறைவாக இருக்கின்றனவென்றும் விமான மந்திரி சபைச் செய்தி நிலையம் கூறுகிறது.

வடக்கு பிரான்சில் நடந்த விமானப்போரைப் பற்றி, பிரிட்டிஷ் மந்திரி சபை அறிக்கை கூறுவதாவது :— ஜெர்மன் விமானச்சாலைகள், துருப்புகள், பீரங்கிப் படகுகள், இவைகளெல்லாம் பிரிட்டிஷ் விமான யந்திர பீரங்கிகளால் சுடப்பட்டன. கரையோர விமானப்படை, டங்கர்க்குக்கருகில் இருந்த 3,000 டன் எதிரிக் கப்பல் பலமாகத் தாக்கப்பட்டு, முழுகும் தறுவாயில் விட்டுவிடப்பட்டது. லைல என்ற இடத்துக்கு அருகிலிருக்கும், எஃகுத் தொழிற்சாலையும், யந்திர தொழிற்சாலையும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. இந்த சண்டைகள் எல்லாவற்றிலும், பிரிட்டிஷ் விமானங்களில் 9 இழக்கப்பட்டன. எட்டு எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன ; அவைகளில் மூன்று தரையிலிருக்கும்போதே அழிக்கப்பட்டன . இன்னும் அநேக எதிரி விமானங்கள் பழுதாக்கப்பட்டன.

வரவர, பிரிட்டிஷ் விமானப்படை அதிகமாகவும், கடுமையாகவும், தாக்கிக்கொண்டு வருகிறதென்று தெரிகிறது. கீல், டூசல்தார்ப் என்ற இரண்டு ஜெர்மன் கப்பற் பட்டணங்கள் தொடர்ச்சியாக ஐந்து இரவுகள் தாக்கப்பட்டன. கலோன் நான்கு இரவுகள் தாக்கப்பட்டன. பிரமென், வில்ஹெம்ஷேவன், எம்டன் என்ற மூன்று இடங்களும், இரண்டுதடவை தனித்தனியாகத் தாக்கப்பட்டன.

இதல்லாமல், பகற்காலங்களில் பிரிட்டிஷ் விமானங்கள் பல இடங்களைத் தாக்கியிருக்கின்றன. வடக்கு பிரான்சில், ஹேசல்புரூக்கில் உள்ள சாமான் ரயில் வண்டிச் சாலைகளைத் தாக்கியதில், வெடிகுண்டு சாமான்கள் கொண்டுசெல்லும் ஒரு ரயில் வண்டித்தொடர் முழுவதும் வெடித்து நாசமாய் விட்டது; ஒரு பாலமும் இடிந்து விழுந்துவிட்டது. பெத்தூன் என்ற இடத்திலுள்ள தொழிற்சாலை யந்திரங்களும், காமினெஸ் என்ற இடத்திலுள்ள மின்சார யந்திரசாலையும் பலமாகத் தாக்கப்பட்டன.

சென்ற வாரத்திய செய்திகளிலிருந்து, ஐரோப்பாவில் நடந்த விமானப் போர்களில், பிரிட்டனுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைவிட ஜெர்மனிக்கு அதிகமான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஜூன் மாதம் 22-ந்தேதி நாசமாக்கப்பட்ட ஜெர்மன் விமானங்கள் 30; பிரிட்டிஷ் விமானங்கள் இரண்டு; இதில் ஒரு விமான ஓட்டி உயிர் தப்பினர். ஜெர்மனியிலும், வடக்கு பிரான்சிலும் தொடர்ச்சியாகச் செய்யப்பட்ட தாக்குதல்களில், 34 பிரிட்டிஷ் விமானங்கள் திரும்பி வரவில்லை; இதில் மூன்று விமான ஓட்டிகள் உயிர் பிழைத்தார்கள். அழிக்கப்பட்ட ஜெர்மன் விமானங்கள் 109.

ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கரங்கத்திலும் அச்சு நாடுகள் ஒரு வாரத்தில் இழந்த விமானங்களின் மொத்தம் 183. இந்த வருஷத்தில், வாரக்கணக்கில் அதிகமாக நிற்பது இதுதான். பிரிட்டன் 65 விமானங்களை இழந்தது; ஆனல் அநேக விமான ஓட்டிகள் உயிர் தப்பினர்கள். ருஷ்யா கூறுவதையும் கணக்கிட்டால், ஒரு வாரத்தில் 500 அச்சு விமானங்களுக்குமேல் நாசமாக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டனைப் பாதுகாப்பதில் ஈடுபட்ட விமானங்களில் ஒன்றுகூட சென்றவாரம் அழிக்கப்படவில்லை. இரவில் சிறிது சிறிதாகத் தாக்கிய ஜெர்மன் விமானங்களில் 12 சுட்டு வீழ்த்தப்பட்டன. ஜெர்மனியிலும், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளிலும், 96 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. இதில் 54 பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன. மத்தியகிழக்கு அரங்கத்தில் 73 அச்சு விமானங்கள் அழிக்கப்பட்டன; 11 பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன. அந்த ஜெர்மன் விமானங்களில் இரண்டை வீழ்த்தியது பிரிட்டிஷ் கப்பற்படை.

பிரிட்டனைத் தாக்குவதற்காக சில ஜெர்மன் விமானங்கள் முயற்சித்தன என்று சென்ற வாரச் செய்திகளிலிருந்து தெரிகிறது. மேற்கு இங்கிலாந்து, தெற்கு வேல்ஸ், கிழக்கு ஆங்கிலியா பிரதேசங்களில் சில வெடிகுண்டுகள் போடப்பட்டன.

14504
JL
V1:19(3M)m N4

ஒரு எதிரி வெடிகுண்டு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. சென்ற ஞாயிற்றுக்கிழமை ஒரு ஜெர்மன் விமானங்கூட இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி பிரிட்டனுக்கு வரவில்லை என்று பிரிட்டிஷ் மந்திரி சபை அறிக்கை கூறுகிறது. ஆனால் ஞாயிற்றுக்கிழமை இரவு, சில ஜெர்மன் விமானங்கள் தெற்கு இங்கிலாந்து பிரதேசத்தில் சில வெடிகுண்டுகளைப் போட்டன. ஒரு ஜெர்மன் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

சவுத் வார்க்கில் உள்ள ஒரு மாதாகோவில் ஜெர்மன் வெடிகுண்டுகளால் நாசமாக்கப்பட்டது. 1861-ம் வருஷத்திலிருந்து தெய்வப் பிரார்த்தனை நடந்துவந்த அந்தக் கோயிலில் கடைசி முறையாக சென்ற ஞாயிற்றுக்கிழமை இடிந்த கட்டடத்தில் ஒரு பிரார்த்தனை நடந்தது.

பிரிட்டிஷ் விமானப் படையில் புதிய முறையில் செய்யப்பட்ட ஹரிகேன் விமானங்களும், ஸ்பிட்பையர் விமானங்களும், ஜெர்மன் விமானங்களைவிட அதிக வேகமாகச் செல்லக்கூடியவை; மிக நன்றாகப் போர்புரியும் அனுகூலங்கள் உடையவை. எம்-ஈ 109 என்பது தான் ஜெர்மனியின் சிறந்த ஆகாய விமானம். அதை விட வேகத்திலும், உயரத்தில் பறப்பதிலும், மேற் கூறிய பிரிட்டிஷ் விமானங்கள் சிறந்தவை; இதல்லாமல், டார்னடோ, டைபூன் என்ற வேறு இரண்டுவித பிரிட்டிஷ் விமானங்கள் இவைகளை விட புது மாதிரியான முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் ஜெர்மன் யுக்திக்காரர்கள் புதிய முறையில் அவர்களின் ஆகாய விமானங்களை நிர்மாணிக்காவிட்டால், அவைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகும். டைபூனும், டார்னடோவும் யுத்த அரங்கத்துக்கு அதிகமாக வந்தால், ஜெர்மன் விமானங்களுடைய கதி என்ன வென்பது தெரியும்.

### 2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக்கடலும்.

ஆப்பிரிக்காவில், பிரிட்டன் சில வெற்றிகளை அடைந்திருக்கிறது. அபிசீனியாவில் கிம்பி என்ற இடம் பிடிக்கப்பட்டது; இத்தாலியர்கள் சரணாகதியடைந்தார்கள். ஒரு இத்தாலிய தளகர்த்தர் (ஜெனரல்), ஒரு படைத் தலைவர் (‘ பிரிகேடியர் ’), 245 ராணுவ ஆபீசர்கள், 1,941 இதர உத்தியோகஸ்தர்கள், 841 அஸ்காரிகள்—இவர்கள் சரணமடைந்ததும் கைதியாக்கப்பட்டார்கள். ஆறு பெரிய பீரங்கிகளும் இதர யுத்த தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன.

திரிபோலி துறைமுகப்பட்டணம் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டது. பல எதிரி கப்பல்கள் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. ஒரு கப்பலின் மேல் தளம் அப்படியே வெடித்து சிதரடிக்கப்பட்டது. 20,000 டன் எடையுள்ள ஒரு கப்பல் தாக்கப்பட்டு, நன்றாகப் பழுதாக்கப்பட்டது. ஒரு கப்பல் பாதி முழுகும் தறுவாயில் இருந்தது. ஏழு எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; இன்னும் பல பழுதாக்கப்பட்டன.

மத்திய கிழக்கரங்கத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய விமானப்படை செய்த வேலையைப் பற்றி பிரிட்டிஷ் மந்திரி சபை ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

இந்த யுத்த அரங்கத்தில் பழுதாக்கப்பட்டதும், நாசமாக்கப்பட்டதுமான எதிரி விமானங்கள் மொத்தம் 1,453. ஜூன் மாதத்தில் மாத்திரம் 210 எதிரி விமானங்கள் வீழ்த்தப்பட்டிருக்கின்றன. இதில் 55 விமானங்கள் விஷி அரசாங்கத்தைச் சேர்ந்தவை. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய விமானப்படை 65 விமானங்களை மாத்திரம் இழந்துவிட்டது.

அபிசீனியாவில், பிரிட்டிஷ் துருப்புகள் ஜிம்மா என்ற இடத்தைப் பிடித்த பிறகு தென்பி என்ற பட்டணம் கைப்பற்றப்பட்டது; 600 இத்தாலியர்களும், 100 ஆப்பிரிக்கர்களும் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். லெகெம்டி என்ற இடத்துக்கு மேற்கில், எல்லா ஏற்பாடுகளும் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றன.

பென் காசியையும், திரிபோலியையும் பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் பலமாகத்தாக்கின.

மால்டாவைத்தாக்கிய இத்தாலிய விமானங்களில் 6 சுட்டு வீழ்த்தப்பட்டன; சில பழுதாக்கப்பட்டன; ஒரு இத்தாலிய வெடிகுண்டு விமானம் நாசப்படுத்தப்பட்டது.

லிபியாவில் உள்ள நிலைமையில் யாதொரு மாறுதலும் இல்லை.

இந்தியத்துருப்புகள் அபிசீனியாவில் செய்த அரிய பெரிய வேலைகளைப் பாராட்டி, லண்டன் “ டைம்ஸ் ” பத்திரிகை எழுதியிருக்கிறது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக்கடலும்.

அமெரிக்கா பட்டாளத்துக்காக, 7,000 கோடி டாலர்கள் (அமெரிக்க நாணயம்) ஒதுக்கப்படவேண்டுமென்ற மசோதாவில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கையெழுத்திட்டார். இது வரைக்கும் அவ்வளவு பெரிய தொகை எந்த விஷயத்திற்கும் ஒதுக்கப்படவேயில்லை என்று சொல்லப்படுகிறது. சென்ற உலக மகா யுத்தத்தில்கூட அவ்வளவு பெரிய தொகை செலவிடுவதற்காக அமெரிக்க பிரசிடெண்ட் கையெழுத்திட்டதில்லை என்று கூறுகிறார்கள்.

அமெரிக்க நாணயமாகிய டாலரின் மதிப்பைக் குறைப்பதற்குப் பிரசிடெண்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் இன்னும் இரண்டு வருஷங்களுக்கு நீடிக்கப்பட்டது.

அமெரிக்கப் பட்டாளத்துக்கு 9 லட்சம் ஆட்களை இந்த வருஷம் சேர்க்கவேண்டுமென்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் உத்தரவிட்டிருக்கிறார்.

அமெரிக்கத்துருப்புகள் யுத்த அரங்கங்களில் இறங்காமல், அமெரிக்கா, பிரிட்டனுக்கும், சீன தேசத்துக்கும் எல்லாவித உதவியும் கொடுக்கவேண்டுமென்று மிஸ்டர் ஹூவர் (முன்பு அமெரிக்க பிரசிடெண்டாயிருந்தவர்) ஒரு ரேடியோ பிரசங்கத்தில் கூறினார்.

12,856 ஆகாய விமானங்கள் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதாவை, அமெரிக்க செனட் சபை பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் கையெழுத்துக்காக அனுப்பியிருக்கிறது.

அமெரிக்காவை எதிர்ப்பதற்கு வரும் வெடிகுண்டு விமானங்கள், அதிக தூரத்தில் வரும்போதே அறிந்துகொள்ளும்படியான ரேடியோ யந்திர விசை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க யுத்த இலாகா அறிவிக்கிறது. அமெரிக்காவின் நீண்ட கரையோரத்தில் பல இடங்களில் இந்த யந்திர விசை வைக்கப்படுமென்றும், அதற்காக 500 யந்திரப் பயிற்சியுள்ளவர்கள் வேண்டுமென்றும் தெரிகிறது. பிரிட்டனில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ரேடியோ யந்திர விசையைப்போல, அமெரிக்க நூதன விசை இருக்கிறதென்று கூறப்படுகிறது. ஆனால் அது எப்படி வேலை செய்கிறது முதலிய விவரங்கள் ரகசியமாய் வைக்கப்பட்டிருக்கின்றன.

அட்லாண்டிக் கடலைத்தாண்டி, ஒரு அமெரிக்க வெடிகுண்டு விமானத்தைப் பிரிட்டனுக்கு மிஸ் சாக்சிலேன் காக்ரேன் என்ற பெண்மணி கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். இந்த தைரியமான வேலையைச் செய்த முதல் பெண்மணி இவர்தான்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையில் இரண்டாவது அமெரிக்கப்படை ஏற்படுத்தப்போகிறார்கள். அநேக அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் விமானப்படையில் சேர ஆவல் கொண்டு அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறார்கள். அமெரிக்காவில் சிறிது பயிற்சியை ஆரம்பித்த அவர்கள் இப்போது பிரிட்டனில் முழுப் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்ய யுத்த சம்பந்தமாக, பிரிட்டிஷ் ஸ்தானீகரான லார்டு ஹாலிபாக்ஸ், அமெரிக்க அரசியல் மந்திரியான மிஸ்டர் சம்னர் வெல்ஸிடம் இரண்டு தடவை கலந்து பேசினார்.

பிரிட்டனில் உள்ள அமெரிக்க ஸ்தானீகர் காரியாலயத்திலுள்ளவர்களுக்கு உதவியாக, அமெரிக்கக் கப்பல் இலாகாவைச் சேர்ந்த 3 உத்தியோகஸ்தர்களும், 60 ஆட்களும், பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் பாதுகாப்பு சம்பந்தமாக, பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் அதிகாரத்தை அதிகப்படுத்தும்படி, சட்டசபையைக் கேட்பதென்று அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அப்படி அதிகப்படுத்தினால், அமெரிக்கப்படைகளின் பிரதம தளகர்த்தர் என்ற முறையில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்,

அமெரிக்க பட்டாளங்களை எங்குவேண்டுமென்றாலும் அனுப்பலாம்.

அமெரிக்காவில் கப்பல் கட்டும் திட்டம் மிக மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதைப்பற்றிய விவரங்களை டான் ராஜர்ஸ் என்பவர் நியூயார்க் "ஓர்ல்டு டெலிகிராம்" என்ற பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அவர் கூறுவதாவது :—"அமெரிக்கக் கப்பல் கட்டும் சாலைகளில் இப்போது பிரமிக்கும்படியான அளவுக்கு, கப்பல்கள் கட்டப்படுகின்றன. 14 பெரும் யுத்தக்கப்பல்கள், 24 சப்மரீன்கள், 44 நாசகாரிக்கப்பல்கள், 3 கடல் வெடிகுண்டு துடைக்கும் கப்பல்கள், 4 சப்மரீன் டெண்டர் கப்பல்கள், 6 கடல் விமான டெண்டர் கப்பல்கள், ஒரு கடல் வெடிகுண்டு வைக்கும் கப்பல்—இவைகளெல்லாம் இப்போது கட்டப்படுகின்றன.

"மேலும், தனிப்பட்ட நபர்களுடைய பிரத்தியேகக் கப்பல்கட்டும் சாலைகளில், 3 பெரும் யுத்தக்கப்பல்கள், 12 ஆகாய விமானம் தாங்கிச் செல்லும் கப்பல்கள், 152 நாசகாரிக்கப்பல்கள், 14 பெரும்போர்க்கப்பல்கள், 43 லேசான போர்க்கப்பல்கள், 51 சப்மரீன்கள், இன்னும் இதர கப்பல்கள், கட்டப்படுகின்றன. கப்பல் கட்டும் திட்டம் எல்லாத்துறைகளிலும் கால அளவுக்கு முன்னமேயே நிறைவேற்றப்படுகின்றன."

"எல்லாவற்றையும் விட முக்கியமான ஒரு விஷயத்தில் அதிதுரிதமாக வேலை நடைபெற்று வருகிறது. பெரிய பிரயாணிக்கப்பல்கள் துருப்புகளைத் தாங்கிச் செல்லும் கப்பல்களாகத் திருத்தி அமைக்கப்படுகின்றன. சாமான் கப்பல்கள், 12 அல்லது 15 போர் விமானங்கள் தாங்கிச் செல்லும் கப்பல்களாகச் செய்யப்படுகின்றன."

### 4. கிரீசும், இத்தாலியும்.

ரஷ்யாவுக்குச் செல்லும் இத்தாலியத் துருப்புகளை வெரோனா நகரத்தில், முசலோனி பார்வையிட்டார். "நாகரீகத்துக்குச் ஜென்ம விரோதியான ரஷ்யா" வுடன் போர் செய்யப் போகும் சிப்பாய்களைப் பார்வையிடுவதற்காக தான் வந்ததாகக் கூறினார். அவருடன் கூட இத்தாலியப்பட்டாளத்தின் பிரதம தளகர்த்தர், ஜெனரல் காவலெரோவும், ரோமில் உள்ள ஜெர்மன் ராணுவ ஸ்தானீகர் ஜெனரல் வான் ரிண்டலனும், வந்திருந்தார்கள்.

3,000 இத்தாலியக் கைதிகள் பிரிட்டனில் சீக்கிரம் வருவார்களென்றும், அவர்கள் விவசாய வேலை செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுவார்களென்றும், பிரிட்டிஷ் விவசாய மந்திரி, மிஸ்டர் ஹட்சன், காமன்ஸ் சபையில் கூறினார்.

எதிரி நாடுகளின் ரேடியோவையாவது, அல்லது நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் ரேடியோவையாவது இத்தாலியில் யாராவது கேட்டால் அவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும். இந்தச் சட்டம் முன்னமேயே இருந்தது. இப்போது தண்டனை மூன்று மடங்கு அதிகப்படுத்தப்பட்டது. இந்தச் செய்தி சுவிட்சர்லாந்திலுள்ள சூரிச் பத்திரிகையான "நூசர்ஷேர் சீடங்"குக்கு அதன் மிலான் நிருபர் அனுப்பியதாகும்.

### 5. பால்கன்ஸ், துருக்கி, இராக், சிரியா முதலியன.

"ரிப்ஹா" என்ற துருக்கிப் பிரயாணிக் கப்பல் ஒரு சப்மரீனால் தாக்கப்பட்டு, மார்சீன், சைப்ரஸ் இந்த இரண்டுக்கும் மத்தியில் முழுகடிக்கப்பட்டது. அந்த சப்மரீன் எந்த தேசத்தைச் சேர்ந்தது என்பது தெரியவில்லை. ஆனால் முழுகடிக்கப்பட்ட அந்தப் பிரதேசத்தின் அருகில் எங்கும் பிரிட்டிஷ் சப்மரீனாவது அல்லது நேச தேசச் சப்மரீனாவது இருந்ததாகத் தெரியவில்லை. கப்பலிலிருந்த 201 பிரயாணிகளில் 173 பேர் தண்ணீரில் முழுகி இறந்து போய்விட்டார்கள். தப்பிப் பிழைத்தவர்கள் காராஷ் என்ற இடத்தில் இறக்கப்பட்டார்கள். துருக்கிக் கப்பலில் சில துருக்கி சப்மரீன் உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். துருக்கிக்காக இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஒரு சப்மரீனைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் வந்தார்கள்.

இரானுக்கும் ரஷ்யாவுக்கும் எப்போதும் நேச மனப்பான்மை தான் இருந்ததென்றும், அந்த மனப்பான்மை இப்போதும் இருக்கிறதென்றும், அதற்கு மாறாக ஜெர்மானியர்கள் செய்துவரும் பிரசாரம் உண்மையல்லவென்றும், ரஷ்யா, இரானைப் பயமுறுத்தி சில விஷயங்களைக் கேட்டதாக ஜெர்மானியர்கள் கூறுவது விசித்திரமான பொய் யென்றும், மாஸ்கோ ரேடியோ கூறிற்று.

மத்திய சிரியாவில், முக்கியமான பட்டணமாகிய பல்மைராவை நேசதேசத்தினர் கைப்பற்றினர். இது பெட்ரோலுக்கு முக்கிய ஸ்தானம்.

சிரியாவுக்குப் பூரண சுதந்தரம் அளிக்கப்பட்டது என்று ஜெனரல் லூஷான் தில்ஹாம், ஜெனரல் டிகாலின் சார்பாக, அறிவித்திருக்கிறார். சிரியாவின் அரசியல் திட்டத்தை நிர்ணயிப்பதற்கு உரிமை சிரியாவுக்கே கொடுக்கப்பட்டது.

### 6. கப்பல் நிலைமை.

இரண்டு எதிரி கப்பல்கள், 7,000 டன், 5,000 டன் எடையுள்ளவை, ஒரு சப்மரீனால் அழிக்கப்பட்டன. டங்கர்க் கரைக்கருகிலுள்ள கடலில் ஒரு எதிரிக் கப்பல் முழுகடிக்கப்பட்டது.

அட்லாண்டிக் கடலில், "மார்ஸ்டென்" என்ற பிரிட்டிஷ் கப்பல் 'டார்பிடோ' வெடிகுண்டால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது.

### 7. தூரக்கிழக்கு அரங்கம்.

ரஷ்ய—ஜெர்மன் யுத்தத்தைப்பற்றி, ஜப்பானிய முதல் மந்திரி, அரசகுமாரர் கோனோயி, ஒரு ரேடியோ பிரசங்கத்தில் குறிப்பிட்டார். எது எப்படி நடந்தாலும், ஜப்பான் தனக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ அதன்படி நடக்கவேண்டும் என்று அவர் கூறினார்.

ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகாவும் ஜப்பானுடைய கடமையைப்பற்றிக் கூறியிருக்கிறார். "இந்த ரஷ்ய—ஜெர்மன் யுத்தத்தில் ஜப்பானுடைய அடிப்படையான கொள்கை ஜாக்கிரதையாயிருப்பதும், தயாராயிருப்பதும்தான்" என்று அவர் அறிவித்தார்.

அச்சுநாடுகளுடன் இருந்த அரசியல் தொடர்பை சீனா உடைத்துவிட்டது. ஜப்பானியர்களால் நான்கிங்கில் ஏற்படுத்தப்பட்ட வாங் அரசாங்கத்தை அச்சு நாடுகள் அங்கீகரித்தால், சீனாவின் எதிரியுடன் அவைகள் சேர்ந்துவிட்டதாக நன்றாகத்தெரிகிறது என்று சீன அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் கோதேசி, கூறினார்.

### 8. விஷி.

விஷி அரசாங்கம் ரஷ்யாவுடன் வைத்திருந்த அரசியல் தொடர்பை உடைத்துவிட்டது. ஜெர்மனியின் ஆதிக்கத்திலில்லாத பிரான்சின் தொழிலாளிகள் இந்த முடிவைக்கண்டு வருத்தப்படுகிறார்கள். விஷியிலிருந்த ரஷ்ய ஸ்தானீகரும் அவருடைய காரியாலயத்தார்களும், குடும்பங்களும் ஸ்பெயினுக்குப் போய்விட்டதாக ஸ்விட்சர்லாந்து ரேடியோ கூறுகிறது.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

பிரான்சில் உள்ள அமெரிக்க ஸ்தானீகரான அட்மிரல் லீகி தன்னுடைய வீட்டில் லண்டன் ரேடியோ ஒவ்வொரு இரவும் போடுகிறாரென்றும், லண்டன் செய்திகளைக் கேட்பதற்காக விஷியில் உள்ள யூதர்களும், ரஷ்யர்களும், பிரிட்டிஷாரும், அமெரிக்கர்களும் சுமார் 700 பேர் கூடுகிறார்களென்றும், பாரிஸ் ரேடியோ கூறுகிறது.

### 10. நடுநிலைமை நாடுகள்.

ஸ்வீடனில் கட்டாய ராணுவச்சேவை ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்வீடிஷ் அரசாங்கம் கொண்டு வந்த தீர்மானத்தை சட்டசபை அங்கீகரித்துவிட்டது. ஸ்வீடன் கடலில் கடல் வெடிகுண்டுகள் போடப்பட்டிருக்கின்றன.

ஈரானும், ஆப்கனிஸ்தானமும், ரஷ்ய—ஜெர்மன் யுத்தத்தில் நடுநிலைமை வகிப்பது என்று தீர்மானித்துவிட்டன.

ஸ்பெயினில் ரஷ்யாவுக்கு விரோதமாகப் போர் செய்ய ஆள்கள் சேர்ப்பதற்கு, பலாஞ்சு கட்சியினர் முயற்சிசெய்து வருகின்றனர்.

### 11. ரஷ்யாவும், ஜெர்மனியும்.

இப்போதிருக்கும் நெருக்கடியான நிலைமையை உத்தேசித்து, ரஷ்யாவில் ஒரு பாதுகாப்பு சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தலைவர்

மிஸ்டர் ஸ்டாலின்; உபதலைவர், மிஸ்டர் மாலதோவ்; பாதுகாப்பு மந்திரி, மார்ஷல் வராஷிலோவ்; ப்ரிசிடியத்தின் அங்கத்தினர், மிஸ்டர் மாலன் கோவ்; உள்நாட்டு மந்திரி, மிஸ்டர் பெரியா—இவர்கள் அந்தச்சபையின் இதர அங்கத்தினர்கள். இந்தச் சபையை ஏற்படுத்த வேண்டுமென்று, சோவியட் ரஷ்ய குடியரசுகளின் தலைமைச் சபையும், பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் கமிட்டியும், பொது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜில்லா நிர்வாகஸ்தர்களின் சபையும், தீர்மானித்துவிட்டன.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு சபையினிடத்தில் அரசாங்கத்தின் எல்லா பொருப்பும், அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த சபையின் தீர்மானங்களை, நாட்டுமக்கள், பத்திரிகைகள், யுத்த வேலைக்காரர்கள் முதலிய சகலரும் கட்டாயமாக நிறைவேற்றவேண்டும் என்று மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

இப்போது நடைபெற்றுவரும் ரஷ்ய-ஜெர்மன் யுத்தத்தில், ஜெர்மனி தன்னுடைய முழுபலத்தையும் ரஷ்யாவினமேல் பிரயோகித்து வருகிறதென்றும், 10 லட்சம் ஜெர்மன் துருப்புகள் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனவென்றும், இன்னும் 10 லட்சம் உதவிக்காகத் தயாராய் இருக்கின்றனவென்றும், பிரான்சில் சென்ற வருஷம் விமானப்போரில் கலந்துகொண்ட ஜெர்மன் விமானங்களைவிட அதிகமான விமானங்கள் இப்போது போராடுகின்றனவென்றும், ஜெர்மனியின் சார்பாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனல், கிழக்கு அரங்கத்தில் நடக்கும் விஷயங்களை நேரில் பார்த்து ரேடியோ மூலம் கூறும் ஜெர்மானியர்களே சில விஷயங்களை ஒப்புக்கொள்ளுகருர்கள். ஜெர்மனி மிகக் கடுமையாக சண்டை செய்யவேண்டியிருக்கிறதென்றும், ரஷ்யர்கள் மிகுந்த உறுதியுடனும் தைரியத்துடனும் ஜெர்மன் தாக்குதலைத் தடுத்து வருகிருர்களென்றும், ரஷ்யர்களுடைய யுத்த முறைகளும், போர்த்தந்திரங்களும், ஜெர்மானியர்கள் எதிர் பார்த்ததைவிட அதிகமாயிருக்கின்றனவென்றும், அவர்கள் கூறுகிருர்கள்.

அதிசீக்கிரத்தில் மின்னல் வேகத்தில், ரஷ்யாவில் வெற்றி பெறலாம் என்று வெளியிடப்பட்ட சில அறிக்கைகளுக்கு பதிலளிக்கும் முறையில், இத்தாலியின் தலை நகரான ரோமில் இருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை கூறுவதாவது :—

"இப்போது ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் மிகவும் சிக்கலானதும், கஷ்டமானதுமான யுத்தம். ஏனென்றல் யுத்த அரங்கம் மிக நீண்டது; 1,500 மைல் நீளத்தில் சண்டை நடக்கிறது. ஏராளமான மனிதர்களும், யுத்த தளவாடங்களும் இரண்டு பக்கத்திலும் போரில் ஈடுபட்டிருக்கின்றன. முன்னேறிச் செல்லும் ஜெர்மன் துருப்புகளில் முக்கியமாக மோட்டார் வண்டிப் படைகளும், யந்திரப் படைகளும், பரந்த வெட்டவெளிகளைத் தாண்டிச் செல்லவேண்டும்; அவைகளுக்குச் 'சப்ளை' அனுப்பிக்கொண்டே இருப்பது மிகக் கஷ்டமான காரியம். இதல்லாமல் அவைகள் அநேக ரஷ்யப் பாதுகாப்பு அரண்களையும், இயற்கையிலேயே உள்ள பாதுகாப்புகளையும் ஜெயிக்கவேண்டும்."

இதனல் இப்போது ஜெர்மனி எந்த பிரதிகூலங்களுக்கிடையில் போர்புரிகிறதென்றும் தெரிய வரும். ஜெர்மன் துருப்புகளை ஜெயிக்க யாராலும் முடியாது என்ற ஒரு கட்டுக் கதையைப்பற்றி, ரஷ்யாவின் ராணுவப் பள்ளிக்கூடத் தலைவர், லெப்டினண்டு-ஜெனரல் ஜமக்கேல் கோஷின், "பிரவ்தா" பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிருர். அவர் கூறுவதன் சுருக்கமாவது :—

"ஜெர்மன் துருப்புகள் தாங்கள் எப்போதும் தோல்வியடையமாட்டா என்று வீண் பெருமை பேசிக்கொண்டு திரிகின்றன. ஆனல் 1939-ம்வருஷத்திலும் 1940-ம்வருஷத்திலும் பெற்ற வெற்றிகள் சிறு நாடுகளில் துரோகிகளை ஏற்படுத்தி, அவர்கள் மூலம் அந்நாடுகளைக் காட்டிக்கொடுக்கும்படி செய்ததால் கிடைத்த வெற்றிகளே யொழிய வேறில்லை. எங்கேயாவது சரியான எதிர்ப்பு கிடைத்த காலத்தில் ஜெர்மானியர்கள் தத்தளித்திருக்கிருர்கள். போலந்து மக்கள் எதிர்த்துச் சண்டைபோட்டபோது ஜெர்மானியர்கள் மிகுந்த நஷ்டமடைந்தார்கள். ஏராளமான டாங்கிப் படைகள் அடியோடு அழிக்கப்பட்டன. கிரேக்கர்கள் மெடாக்சாஸ் லைனிலிருந்து ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில் மறுபடியும் திருப்பித் தாக்கியிருந்தால் பால்கன் பிரதேசத்தில் வேறு விதமான முடிவு ஏற்பட்டிருக்கும்.

போலந்தில் ராணுவ சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளெல்லாம் ஜெர்மனிக்கு நன்ருய்த் தெரியும். நார்வீஜியத் துருப்புகள் துப்பாக்கிகளுக்குத் தோட்டா இல்லாமல் ஜெர்மன் துருப்புகளுக்குச் சமீப தூரத்தில் பயிற்சிசெய்து வருகின்றன என்று தெரிந்து ஜெர்மனி தெரிந்த விஷயத்தை தன் காரியத்துக்கு உபயோகப்படுத்திற்று. ஹாலந்தில் தரையிலிருந்து ஜெர்மன் 'பாரஷூட்' விமானத்துருப்புகளுக்கு சைகை கொடுத்த பிறகுதான் அவைகள் ஹாலந்தில் இறங்கி அதைக் கைப்பற்றிக்கொண்டன.

யூகோஸ்லாவியாவில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அநேகர் ஜெர்மனியின் கையாளாக இருந்தார்கள். கடைசிகாலத்தில் இப்படிப்பட்ட அநேகரை யூகோஸ்லாவிய முதல் மந்திரி, ஜெனரல் சிமோவீச், வேலையிலிருந்து நீக்கிவிட்டார். ஆனல் அந்த நிலைமையில் அவர் செய்தது ஒன்றும் பிரயோசனப்படவில்லை. பிரான்சில் அநேக துரோகிகள் இருந்தார்கள். மாகினோ லைன் ஜெர்மானியர் கையில் விழுந்ததற்குக் காரணம் துரோகம்தான்.

இப்படி பல நாடுகளில் துரோகமும் தந்திரமும்தான் வெற்றி பெற்றனவே ஒழிய ஜெர்மன் படைத்திறமை வெற்றி பெறவில்லை. ஆனல் இப்போது ரஷ்ய யுத்தத்தில் பலத்தில் தனக்கு மிஞ்சிய எதிரியுடன் ஜெர்மனி போராடுகிறது; நவீன யுத்த முறைகளில் தேர்ச்சிபெற்ற நாட்டுடன் சண்டை செய்கிறது. இதில் ஜெர்மனி அடியோடு அழிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை."

பிரிட்டனிலிருந்து மாஸ்கோவுக்குச் சென்ற பிரிட்டிஷ் ராணுவ கோஷ்டியார் ரஷ்ய ராணுவக் கோஷ்டியாரிடம் கலந்து பேசினுர்கள். பிரிட்டன் ரஷ்யாவுக்கு எந்தெந்த முறையில் உதவி செய்யலாம் என்ற விஷயம் பேசப்பட்டதாகத் தெரிகிறது. ரஷ்ய ஆகாய விமானப்படைக்கு பிரிட்டனின் விமானப் போர் அனுபவங்கள் உபயோகப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ப்ரூத் ஆற்றுச்சண்டையில் ஜெர்மானியர்கள் முன்னேறிவருவது தடுக்கப்பட்டது. ரஷ்யத் துருப்புகள் பலமாக அவர்களைத் தாக்கின. வில்னுபகுதியில் ரஷ்யர்கள் பின்னிடைந்து சென்று மறுபடி தாக்குவதற்கு வேறு மாதிரியான ஏற்பாடுகள் செய்கிருர்கள்.

வெள்ளை ரஷ்யாவின் தலைநகரமான மின்சிக்கின் அருகில் மாபெரும் போர் நடக்கிறது. ஏராளமான டாங்கிகள் இருபக்கமும் போர் செய்கின்றன. ஜெர்மன் டாங்கிப் படைகள் நாசம் செய்யப்பட்டதாக ரஷ்ய அறிக்கை கூறுகிறது. ஜெர்மானியர்கள் லவௌ (லெம்பர்க்), லிபா என்ற இடங்களைப் பிடித்துவிட்டதாகக் கூறுகிருர்கள்.


வடக்கில் கடுமையான யுத்தம் நடக்கிறது. விபார்க் என்ற இடத்தில் ஜெர்மானியர்கள் இறங்க முயற்சித்தது தடுக்கப்பட்டது. ரஷ்ய விமானப்படை ஜெர்மன் டாங்கிப் படைகளைப் பலமாகத் தாக்கிக்கொண்டு வருகிறது.

ஜெர்மானியர்கள் பால்டிக் பிரதேசத்தில் முன்னேறியிருக்கிருர்கள். ரிகாவையும், விண்டோவையும் கைப்பற்றிவிட்டார்கள். எஸ்தோனியாவில் ஜெர்மன் பாரஷூட் (விமான விரிப்புக்குடை) துருப்புகள் இறங்கியதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. பால்டிக்கிலிருந்து லெனின் கிராடுக்குப் போகும் ரயில் பாதையை நான்கு இடங்களில் விமான வெடிகுண்டுகளினுல் உடைத்து விட்டதாக ஜெர்மானியர்கள் கூறுகிருர்கள்.


மின்சிக் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் முன்னேறி வருவது தடுக்கப்பட்டிருக்கிறது. மூர்மான்சிக், திவின்சிக், மின்சிக், லக், இந்த இடங்களுக்குச் செல்லும் வழியில் சண்டை நடக்கிறது. ரஷ்யர்கள் நான்கு பகுதிகளாகப் பிரிந்து ஜெர்மானியர்களை

# ரஷ்ய-ஜெர்மன் போரை விளக்கும் படம்

அளவு 1 அங்குலம் = 160 மைல்கள்



## பிரிட்டனின் பாதுகாப்புகளை சர்ச்சில் பார்வையிடுகிறார்.



தன்னுடைய மனைவியுடனும் கப்பல்படை மந்திரி மிஸ்டர் ஏ. வி. அலக்ஸாண்டருடனும் முதல் மந்திரி பிரிட்டனின் கடற்கரைப் பாதுகாப்புகளை மறுபடியும் பார்வை யிட்டார். கோஷ்டி கப்பலில் இருக்கிறதை படத்தில் பார்க்கவும்.

நான்கு இடங்களில் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி ரஷ்ய அறிக்கை கூறும் விபரமாவது :—

மூர்மான்சிக்குப் போகும் வழியில், கிரேட்னி தீப கற்பத்தில், ரஷ்யத்துருப்புகள் ஜெர்மானியரைத் தடுத்துப் போர் செய்தன. ஜெர்மானியர்களுக்கு அதிகமான நஷ்டம் விளைவிக்கப்பட்டது. திவின்சிக், மின்சிக் மார்க்கங்களில், ஜெர்மானிய டாங்கித் துருப்புகளை ரஷ்யர்கள் தாக்கி நாசம் செய்தார்கள். லக்குக்குப் போகும் மார்க்கத்தில் நடந்த சண்டையில், ஜெர்மன் மோட்டார் துருப்புகளை ரஷ்யத் துருப்புகள் தாக்கி, பலத்த சேதத்தை விளைவித்தன. ரஷ்ய விமானங்கள் ஜெர்மன் டாங்கிகள் மேல் வெடிகுண்டு மாரி பொழிந்தன. ஜூன் மீ 30௳, எதிரிகள் 102 விமானங்களையும், ஜூலை மீ 1௳ 54 விமானங்களையும் இழந்தார்கள். ரஷ்யர்கள் 22 விமானங்களை இழந்தார்கள்.

முதல் வார யுத்தத்தில், பால்டிக் கடலிலும், கருங்கடலிலும் 7 ஜெர்மன் சப்மரீன்கள் முழுகடிக்கப்பட்டன என்று மாஸ்கோ ரேடியோ கூறுகிறது.

ரஷ்யாவின் தலை நகரான மாஸ்கோவின்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டதாக நியூயார்க்கில் (அமெரிக்கா) முதல் முதலாகச் செய்தி எட்டியிருக்கிறது.

ரஷ்யாவின் முதல் மந்திரி, மிஸ்டர் ஸ்டாலின், யுத்தத்தைப்பற்றி மாஸ்கோ ரேடியோவில் ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். அதில் ரஷ்யாவுக்கு நேர்ந்த நஷ்டங்களை ஒப்புக்கொண்டு, ஜெர்மன் பட்டாளத்தைக் கட்டாயம் ரஷ்யா தோற்கடிக்கும் என்று கூறிவிட்டு, பிரிட்டனும், அமெரிக்காவும் ரஷ்யாவுக்குச் செய்துவரும் உதவியைப் பாராட்டிக் கூறியிருக்கிறார். இந்த மாபெரும் போராட்டத்தில் உலக முழுவதும் ரஷ்யாவை ஆதரிக்கிறதென்றும், சுதந்தரத்துக்காகப் பாடுபடும் மக்கள் எல்லாம் ஹிட்லருடைய அடிமைத்தனத்துக்கு எதிராக ஒன்று சேர்ந்திருக்கிறார்களென்றும், ரஷ்ய நாட்டு மக்கள் ஒற்றுமையுடனும் உறுதியுடனும் இருந்து எதிரியை அழிக்க வேண்டும் என்றும் மிஸ்டர் ஸ்டாலின் கூறினார்.

# ரஷ்யாவில் மாபெரும் யுத்தம்.

## ஜெர்மனியின் நான்கு லட்சியங்கள்.

### காகசஸ் எண்ணெய்ச்சாலைகளும், ஜெர்மனியின் லாப நஷ்டமும்.—

### ரஷ்யத்துருப்புகளின் போர்த்திறமை : கடுமையான விமான, டாங்கிச் சண்டை.

ரஷ்ய வில் மகத்தான யுத்தம் நடைபெற்று வருகிறது. நவீன முறையில், ஏறக்குறைய ஒரே மாதிரியாகப்பயிற்சி செய்யப்பட்ட இரண்டு பெரும் பட்டாளங்கள் ஒன்றோடொன்று போர்செய்து கொண்டிருக்கின்றன. ஆகாய விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள், சிப்பாய்கள்—எல்லாம் போரில் ஈடுபட்டு ஒரே குழப்பமாக 1,500 மைல் யுத்த அரங்கத்தில் சண்டை நடைபெற்றுவருகிறது. இப்படிப்பட்ட நிலைமையில், இருதிறத்தாரும் சண்டையைப்பற்றி மாறுபட்ட அறிக்கைகள் வெளியிடுவது சகஜம்தான். ஆனால் ஒரு விஷயம் விளக்கமாகத் தெரிகிறது. படையெடுத்துவந்த எதிரியுடன் எவ்வளவு கடுமையாகப் போராடவேண்டுமோ, அவ்வளவு கடுமையாக ரஷ்யா போராடிக் கொண்டு வருகிறது: ஜெர்மனியில் ராணுவ வட்டாரங்கள் ரஷ்ய யுத்தத்தைப்பற்றி அதிகப்படியான நம்பிக்கை கொள்ளாமல் சாவதானமான மனப்பான்மையுடன் இருக்கின்றன என்று பர்லினிலிருந்து (ஜெர்மனியின் தலைநகரம்) வந்த செய்தியே கூறுகிறது.

ரஷ்ய யுத்தத்தில் ஜெர்மன் பட்டாளங்களுடைய லட்சியங்கள் நான்கு என்று கூறலாம். அவையாவன:—

(1) லெனின் கிராட் என்ற பட்டணமும், வடக்கில் கிரான்ஸ்டாட் என்ற கடற்படைத்தளமும் ;

(2) மாஸ்கோ என்ற ரஷ்யாவின் தலை நகரம். இதுதான் ரஷ்யாவின் நரம்புஸ்தானமாகிய உயிர் நிலை.

(3) கீவ் என்ற யூக்ரெயின் மாகாணத்தின் தலை நகரம். இந்த மாகாணம் கோதுமை வயல்களுக்குப் பேர்போனது.

(4) ஒடெஸ்ஸா என்ற கருப்புக்கடற்கரைப்பட்டணம். இதைப் பிடித்துக்கொண்டால் பாதும் என்ற முக்கியமான இடத்தைப் பிடிப்பது சுலபம். இங்குதான் பாகு என்ற இடத்திலிருந்துவரும் அநேக மைல் நீண்ட பெட்ரோல் குழாய் முடிகின்றது.

தெற்கில், ருமேனியப்படைகளும், ஹங்கேரியப்படைகளும், ஜெர்மன் பட்டாளங்களுக்குத் துணையாகப் போர்புரிகின்றன. இருந்தபோதிலும், கீவ் என்ற பட்டணத்தை நோக்கியாவது, அல்லது ஒடெஸ்ஸாவை நோக்கியாவது, ஜெர்மன் துருப்புகள் முன்னேறிச் செல்லமுடியவில்லை. இது எதிர்பார்த்த விஷயம் தான். ஏனென்றால், ஜெர்மானியர்களுடைய ஏராளமான டாங்கிகள் கார்பேதியன் மலைகளைத்தாண்டிச் செல்லமுடியவில்லை ; ப்ரூத், டக், ட்னீஸ்டர் முதலிய பெரிய ஆறுகளையும் தாண்டிச்செல்வது மிகக்கஷ்டமாயிருக்கிறது. இதல்லாமல், ரஷ்யாவினுடைய பாதுகாப்புப்பலம், முக்கியமாக, தெற்கில்தான் இருக்கிறது. கோதுமையும், பெட்ரோலும், ரஷ்யாவிடமிருந்து கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்பது ஹிட்லரின் நோக்கம் ; அந்த நோக்கத்தைப் பின்பற்றி முன்னேறிச்செல்வதை, ரஷ்யாவின் தெற்குப்பாதுகாப்புப்பலம் தடுத்துக்கொண்டிருக்கிறது.

## ருமேனிய எண்ணெய்ச்சாலையைத் தாக்குதல்.

பிரெஸ்ட்–லிடோவாக், ஓனெட்னி, லவௌ (லெம்பர்க்) என்ற இடங்களை ஜெர்மானியர்கள் பிடித்திருந்தாலும், தெற்கே கருப்புக்கடல்வரைக்கும் சுமார் 500 மைல் தூரம் வரைக்கும் அவர்களுடைய முன்னேற்றம் தடுக்கப்பட்டிருக்கிறது. பெட்ரோல் சண்டையில் ரஷ்யா ஜெர்மனியைப் பலமாகத்தாக்கியிருக்கிறது. ருமேனியாவின் தலை நகரமான பூகாரெஸ்ட்டை, ரஷ்ய ஆகாய விமானங்கள் கடுமையாகத் தாக்கியதன் பயனாக, ருமேனிய அரசாங்கம் அந்த இடத்தைவிட்டு வேறிடத்துக்கு ஓடிவிட்டது. ப்ளோயஸ்வி என்ற ஊரில் உள்ள பெட்ரோல் சுத்தம்செய்யும் சாலைகள், கருப்புக்கடலிலுள்ள ருமேனியத் துறைமுகமாகிய கான்ஸ்டான்சாவில் ஜெர்மனிக்குச் செல்லும் பெட்ரோல் கப்பல்கள், இவைகளெல்லாம் ரஷ்யாவின் அக்கினிக் குண்டுகளால் தாக்கப்பட்டு, நெருப்புப்பற்றிக்கொண்டன.

பால்கன்ஸ் நாடுகளைக் கைப்பற்றியபிறகு, ஜெர்மனிக்குப் பெட்ரோல் அசௌகரியம் குறைந்துவிட்டதென்றும், பிரிட்டனைத் தாக்குவதைத் தடைப்படுத்திக்கொண்டிருந்த காரணம் நீங்கிவிட்டதென்றும், “ மாஞ்செஸ்டர் கார்டியன் ” பத்திரிகை கூறுகிறது. கருப்புக் கடலிலிருந்து டிரீஸ்ட் வரைக்கும் சுலபமான வழி இருப்பதால், ஜெர்மனிக்கு 30 லட்சம் டன் பெட்ரோல் கிடைக்கும் ; இதல்லாமல் பெட்ரோலுக்குப் பதிலாக உபயோகப்படுத்தப்படும் எண்ணெய்களும், ஜெர்மன் ஆதிக்கத்திலுள்ள நாடுகள் ‘ சப்ளை ’ செய்யும் பெட்ரோல் முதலிய எண்ணெய்களும் சேர்த்தால் 1 கோடியே பத்து லட்சம் டன் ஜெர்மனிக்குக் கிடைக்கும். ரஷ்யாவில் காகசஸ் பிரதேசத்தில் உள்ள எண்ணெய்ச் சாலைகளைக் கைப்பற்றிக்கொள்ள ஜெர்மனி விரும்புவதன் காரணம், அவைகள் ஒரு வருஷத்தில் 3 கோடி டன் பெட்ரோல் உற்பத்தி செய்வதுதான்.

ஆனால் அந்த எண்ணெய்ச்சாலைகளை ஜெர்மனி கைப்பற்றிக்கொள்வது சுலபமான காரியமல்ல. அப்படி கைப்பற்றினாலும், யாதொரு பழுதுமின்றி எல்லா இயந்திரங்களும், உள்ளன உள்ளபடி ஜெர்மனி கையாள முடியாது. ஒருக்கால், ஜெர்மனியிடம் எண்ணெய்ச்சாலைகள் சிக்குவதாயிருந்தால், முதலில் ரஷ்யாவால் அவைகள் நாசப்படுத்தப்படும். பெட்ரோலைச் சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் நாசமானால், அவைகளைப் பழுது பார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் குறைந்தபட்சம் ஒரு வருஷமாகும். ஆகையால் உடனே உபயோகப்படுவதற்கு காகேசியன் எண்ணெய்ச்சாலைகள் பிரயோசனப்படமாட்டா. இந்தக் காரணத்தினால் ருமேனியாவில் உள்ள எண்ணெய்ச்சாலைகள் ஜெர்மனிக்கு மிகவும் முக்கியமானவை. புகாரெஸ்ட், ப்ளோயஸ்வி என்ற இடங்களில் அந்த எண்ணெய்ச்சாலைகள் இருக்கின்றன. அவைகளை ரஷ்யாவின் விமானங்கள் வெடிகுண்டுகளால் தாக்கிக்கொண்டிருக்கின்றன. இந்த எண்ணெய்ச்சாலை யந்திரங்கள் அழிக்கப்பட்டால், ஜெர்மனிக்குப்பெருத்த நஷ்டம் ஏற்படும் ; ரஷ்யாவைத் தாக்குவதால் எந்த லாபத்தை ஜெர்மனி எதிர்பார்க்கிறதோ, அந்த லாபத்திற்கும் இந்த நஷ்டத்திற்கும் சரியாய்ப்போய்விடும்.

## வடக்கில் ரஷ்ய பலஹீனம்.

ரஷ்யாவினுடைய பாதுகாப்பில் பலஹீனமான பாகம் வடக்கில் இருக்கிறது. அங்கே ஜெர்மானியர்களுக்குச் சில சௌகரியங்கள் இருக்கின்றன ; சில தடைகளெல்லாம் அவர்களுக்கு அனுகூலமாக நீக்கப்பட்டன. லெனின்கிராடைப் பிடிப்பதற்காக ஜெர்மனி முயற்சிக்கிறது. லிதுவேனியாவின் தலைநகரான கன்னாசையும், ரிகாவையும், ஜெர்மனி கைப்பற்றிக்கொண்டது. ஜெர்மன் துருப்புகள் வடக்கு நோக்கி ஆர்டிக் கடற்கரைக்குச் செல்கின்றன. அவைகளுக்கு பின்லாந்து துருப்புகள் உதவி செய்கின்றன. நார்வேயிலிருந்து பின்லாந்துக்குப் போவதற்கு, ஸ்வீடன் வழிவிடச் சம்மதித்திருக்கிறது. ஆனால் ரஷ்யா பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கியைத் தாக்கியிருக்கிறது ; லெனின்கிராடை எதிரி விமானங்கள் தாக்கியதற்கு, பழிக்குப்பழியாக ரஷ்ய விமானங்கள் ஹெல்சிங்கியின்மேல் வெடிகுண்டு மாரி பெய்திருக்கின்றன. லெனின்கிராடை ஜெர்மானியர்கள் பிடிப்பதைத் தடுப்பதற்கு, ரஷ்யா எல்லாவித கடுமையான முயற்சிகளையும் செய்யும். ஏனென்றால், லெனின்கிராட் கைப்பற்றப்பட்டால், ரஷ்யாவின் பால்டிக் கப்பற்படை சரணாகதியடையும்படி நேரிடும்.

ஜெர்மன் துருப்புகள் லிதுவேனியாவின் பழமையான தலைநகரமான வில்னாவைக் கைப்பற்றிக்கொண்டு, மின்ஸ்க, ஸ்மோல்நாக், மாஸ்கோ முதலிய முக்கியமான நகரங்களை நோக்கி முன்னேறிச்செல்ல முயற்சிக்கின்றன. இதுவரைக்கும் எல்லாவற்றையும் சேர்த்தால் மொத்தம் 200 மைல் தூரம் வரைக்கும் ஜெர்மன் துருப்புகள் முன்னேறியிருக்கின்றன. மின்ஸ்க்கை நோக்கித் தைரியமாக ஒரு ஜெர்மன் படைமுன்னேறியிருக்கிறதே ஒழிய, ரஷ்யாவின் பாதுகாப்பு முன்னரங்கத்தை ஒரு பெரிய அளவுக்குக் கலைத்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, ஜெர்மானியர்கள் பலமாகத் திருப்பித்தாக்கப்பட்டு, மிகுந்த சேதமடைந்ததாகத் தெரிகிறது. கடுமையான யுத்தம் நடந்துகொண்டு வருகிறதென்றும், முன்பு சென்றிருக்கும் ஜெர்மன் டாங்கிப் படைகளுடன் சேர்ந்துகொள்ள முயற்சிக்கும் காலாட்படைகள் துரத்தியடிக்கப்படுகின்றனவென்றும், ஜெர்மனியின் அடிப்படையான படைகளைத் தடுத்து நிறுத்தி அவைகளுக்குப் பலத்த சேதத்தை ரஷ்யத் துருப்புகள் உண்டாக்கியிருக்கின்றனவென்றும் தெரிகிறது.

ஜெர்மானியர்கள் அடுத்தபடியாக மாஸ்கோவைத் தாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இருக்கிறார்கள் என்பது நிச்சயம். ஜெர்மன் படைகளின் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் திரண்டுவரும் ரஷ்யப் படைகளைப் பலமாகத் தாக்கி, மின்னல்போல அவைகளின் மேல் பாய்ந்து அவைகளை அழித்து, பின்னர் மாஸ்கோவைத் தாக்கவேண்டும் என்பது ஜெர்மானியர்களுடைய ஏற்பாடாயிருக்கலாம். மைனாக் பகுதியில் நடந்துவரும் சண்டையின் முக்கிய நோக்கம் இதுதான் ; இந்தச் சண்டையில் 4.000 டாங்கிகள் ஈடுபட்டிருக்கின்றன. கடுமையான போர் நடந்து வருகிறது.

## இரண்டு அறிக்கைகளின் வித்தியாசம்.

ரஷ்யத்துருப்புகள் இதுவரைக்கும் மிகத்திறமையாகப் போர்புரிந்து கொண்டு வருகின்றன. ஆனால் ஜெர்மானியத்துருப்பு வரிசையின் பின்புறத்திலுள்ள பட்டணங்களின் மேல், ரஷ்ய விமானங்கள் போடும் வெடிகுண்டுகள் தொடர்ச்சியாகவும், பலமாகவும் போடப்படுவதில்லை. தரை லட்சியங்களின் மேல் அப்படிப் போட்டால்தான் பெரும் பயன்கள் ஏற்படும் ஆனால் ஜெர்மன் யுத்த அறிக்கைகள் கூறுவதை உண்மையென்று நம்பவே முடியாது. ரஷ்ய யுத்தம் ஆரம்பித்த ஒரு வாரத்துக்குப் பிறகுதான் ஜெர்மனி முதல் அறிக்கையை வெளியிட்டது. அதில் 4,000 ரஷ்ய விமானங்கள், 2,233 ரஷ்ய டாங்கிகளும் நாச

மாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. 40,000 ரஷ்யர்கள் கைதியாக்கப்பட்டார்களாம். ஆனால் 150 ஜெர்மன் விமானங்கள் மாத்திரம்தான் நஷ்டமாயிற்றாம்!

உள்ளதை அதிகப்படுத்திக்கூறும் ஜெர்மன் அறிக்கைக்கு நேர் மாறுபாடனது ரஷ்ய அறிக்கை. ரஷ்ய அறிக்கை கூறுவதாவது:—ரிகா வளைகுடாவிலும், பால்டிக்கடலிலும், கருப்புக்கடலிலும், ஜெர்மானியர்களுக்குச் சில கடற்படை நஷ்டங்கள் ஏற்பட்டன; நூற்றுக்கணக்கான ஆகாய விமானங்களையும் ஆயிரக்கணக்கான டாங்கிகளையும், அவர்கள் இழந்தார்கள்.

பியால் ஸ்டோக்கில் நடந்த யுத்தத்திலும், ஜெர்மானியர்களுடைய கணக்குகள் அளவுக்குமிஞ்சி அதிகப்படியாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் கைதிகளும், 400 டாங்கிகளும், 300 பீரங்கிகளும் ஜெர்மானியர்கள் கைப்பற்றினார்களாம். ஜெர்மானியர்கள் லிபோ, ரிகா, விண்டோ, லக் முதலிய இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

மின்சிக் பிரதேசத்தில் கடுமையான போர் நடந்துகொண்டிருக்கிறது. ரஷ்யப்பட்டாளங்கள் நான்கு பகுதிகளாகப் பிரிந்து, ஜெர்மானியர்களை நான்கு இடங்களில் தாக்கிப் போர்புரிகின்றன. ஜெர்மானியர்களுடைய டாங்கிப்படைகளின் மேல் ரஷ்ய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. மின்சிக் பிரதேசத்தில் ஜெர்மானியர் முன்னேற்றம் தடுக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மானியர்களுடைய யுத்த அறிக்கைகள் கூறுவதில் என்ன உண்மையிருக்கிறதென்பது ஒரு சிறு கதையால் தெரியவரும் என்று கூறப்படுகிறது. "நான் ஒரு கரடியைப் பிடித்துவிட்டேன். ஆனால் அந்தக் கரடி என்னை விடமாட்டேனென்கிறது" என்று ஒருவன் சொன்னானாம். அதைப்போல் ஜெர்மனியினுடைய நிலைமை இருக்கிறது. ஜெர்மன் துருப்புகளை, ரஷ்யப்பட்டாளங்கள் வளைத்துப்பிடித்துக்கொண்டால், ஜெர்மனி ரஷ்யப்பட்டாளங்களைப் பிடித்துவிட்டதாகப் பெருமை கொண்டாடுகிறது.

ரஷ்யாவில் இருக்கும் உண்மையான நிலைமையை, முசலோனியின் நண்பரான ஸீனர் கெய்தா "கியர்நேல் டித்தாலியா" என்ற பத்திரிகையில் விளக்கமாகக் கூறுகிறார். ரஷ்ய யுத்தம் அதிசீக்கிரத்தில் முடிந்துவிடும் என்ற எண்ணம் தவறு என்று அவர் விளக்கிக்காட்டியிருக்கிறார். அவர் எழுதியிருப்பதாவது:—

"ரஷ்ய-ஜெர்மன் யுத்தத்தில், போர் இன்னும் ஆரம்ப ஸ்தானத்தில்தான் இருக்கிறது. அச்சுநாடுகள் பெரிய முயற்சி செய்தாகவேண்டும். ரஷ்ய போரரங்கத்தில் சண்டைசெய்தால் சுலபமாக வெற்றி பெறுவதற்குச் சௌகரியங்கள் கிடையாது. உள்ள விஷயங்களை அதிகப்படுத்திக் கூறாமலிருப்பதும், முடிவான சம்பவங்கள் நடந்துவிட்டதாகக் கூறாமலிருப்பதும்தான் புத்திசாலித்தனமாகும். ரஷ்யர்களுக்கு ஏராளமான துருப்புகளும் யுத்த தளவாடங்களும், சரியாகத் தயார் செய்யப்பட்ட பாதுகாப்பு அரண்களும் இருக்கின்றன. ஒருநாட்டுப் பாதுகாப்பில் இவை பெரிதும் உதவியாயிருக்கும்."

பர்லினிலுள்ள வெளிநாட்டு ராணுவ வட்டாரங்கள், ஜெர்மன் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு, புதிய யுத்ததந்திர முறைகளை ரஷ்ய ராணுவத் தலைவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

கடைசியாக வெளியான செய்திகளில் ஜெர்மனியர்கள் ப்ருத் என்ற ஆற்றைக் கடந்து கீவை நோக்கிச் செல்கிறார்களென்றும், மின்சிக் பிரதேசத்திலிருந்து முன்னேறிச் செல்லும் ஜெர்மன் துருப்புகள் மாஸ்கோவுக்கு 250 மைல் தூரத்திலிருக்கின்றனவென்றும், பெரிசினாவைத் தாண்டிச் செல்வதை ரஷ்யர்கள் தடுத்துவிட்டார்களென்றும், கிழக்கு போலந்தில் கடுமையான சண்டை நடக்கிறதென்றும், ருமேனியாவின் தலை நகரமான புகாரெஸ்ட் மறுபடியும் ரஷ்ய வெடி குண்டுகளால் தாக்கப்பட்டதென்றும், தெரிகிறது.

# இந்தியாவின் பிரதம தளகர்த்தர்

## ஜெனரல் வேவல் நியமனம்.

### ரஷ்ய யுத்தத்தால் பிரிட்டனுக்கு ஏற்பட்ட சௌகரியம்.

ஜெர்மனி ரஷ்யாவைப் படையெடுத்த பிறகு, இந்தியாவிலுள்ள பலருக்கு யுத்தத்தின் நெருக்கடியான நிலைமை விளக்கமாகத் தெரியவந்தது. இரண்டு நாடுகளின் மாறுபட்ட கொள்கைகளைப் பற்றி அவர்கள் தெரிந்து கொண்டார்கள். உலகத்தில் நாஸிசத்தை விட கொடுமை, பயங்கரம், தீமை உடையது வேறெதுவும் இல்லை என்று அவர்கள் உணருகிறார்கள். இந்த நிலைமையில், மத்திய கிழக்கரங்க யுத்தத்தில் அழியாப் புகழ்பெற்ற ஜெனரல் வேவல், இந்தியாவின் பிரதம தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருப்பது ஒரு நல்ல காரியம். இப்போது பிரதம தளகர்த்தராக இருந்து, வேலையை விட்டு நீங்கி, மத்திய கிழக்கரங்கத்தில் யுத்த வேலைக்காகப் போகும் சர் கிளாட் ஆகின்லெக், ஜெனரல் வேவலைப்பற்றி, தமது பிரிவுபசார அறிக்கையில் பாராட்டிக் கூறியிருக்கிறார். இத்தாலியை ஆப்பிரிக்காவில் முறியடித்து, சோமாலிலாந்து, எரீட்ரியா, அபிசீனியா முதலிய இடங்களில், இத்தாலிய சேனைகளைத் தோற்கடித்து, இராக்கிலும், சிரியாவிலும் அச்சு நாடுகளின் தந்திரங்களைப் பாழ்படுத்திவிட்ட பெரும் வீரர் என்று ஜெனரல் வேவலைப் பாராட்டிக் கூறியிருக்கிறார். ரஷ்ய யுத்தத்தைப் பற்றி அவர் கூறும்போது, "1812-ம் வருஷத்தில் நடந்தது 1941-ல் நடக்கலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். எப்படி நெப்போலியன் மாஸ்கோ வரைக்கும் நெருங்கிப் பின்னர் திரும்பி வரும்படி நேரிட்டதோ, அப்படி இப்போதும் நடக்கலாம் என்ற அர்த்தத்தில் அவர் கூறியிருக்கிறார்.

இப்போது ரஷ்ய யுத்தத்தில் ஒரு அனுகூலம் உண்டு. ஜெர்மனி ரஷ்யாவில் தன் முழுபலத்தையும் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கும் போது, பிரிட்டன் தன்னுடைய் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ளலாம். அமெரிக்க யுத்த சாமான் திட்டமும், பிரிட்டன் யுத்த தளவாட உற்பத்தி ஏற்பாடும் செவ்வையாக நடை பெறுவதற்கு இப்போது நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

### கர்னல் நாக்ஸ் பிரசங்கம்.

அமெரிக்க கடற் படை மந்திரி, கர்னல் நாக்ஸ், ஒரு முக்கியமான பிரசங்கம் செய்திருக்கிறார். "அட்லாண்டிக் கடலில் ஜெர்மனியின் பலத்தை அழிப்பதற்கு நம்முடைய கடற் படையை உபயோகப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. இதுதான் ஓங்கியடிப்பதற்குச் சமயம்" என்று அவர் கூறினார். இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அமெரிக்கா கண்விழித்து வேண்டிய தியாகங்களைச் செய்யவேண்டுமென்றும், ஹிட்லர் ஜெயித்தால் உலகமே நாஸிசத்துக்கு அடிமையாய் விடுமென்றும் அவர் கூறினார். கூடிய சீக்கிரத்தில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தீவிரமாக ஏதோ ஒரு காரியம் செய்யப்போகிறாரென்றும், அதற்கு கர்னல் நாக்ஸின் பேச்சு ஒரு நல்ல அறிகுறியென்றும் சொல்லப்படுகிறது.

# இருதலைக்கொள்ளி எறும்புபோன்ற ஜப்பான்.

## ரஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் இடையில்படும் சங்கடம்.

### கிழக்கிந்திய தீவுகள் விரோதமான மர்மம்.

ரஷ்ய-ஜர்மன் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து ஜப்பான் தன்னுடைய நோக்கம் என்ன என்பதைப் பற்றி அதிகார பூர்வமாக அறிக்கையொன்றும் வெளியிடவில்லை. ஆனால் மந்திரிசபை ஆலோசனைகள் மாத்திரம் பலதடவைகள் ரஷ்ய-ஜெர்மன் யுத்த சம்பந்தமாக நடந்திருக்கின்றன. ஜப்பான் ரேடியோ செய்திகள் ஜெர்மனியின் சார்பாக இருப்பதாகத் தெரியவில்லை. ஹிட்லருடைய சமீபச்செயல்களைப்பற்றி,

ஜப்பான் சங்கடப்பட்டுக்கொண்டிருப்பதாகவும், இதனால் ஜப்பான் நேசதேசத்தினருடன் சேர்ந்துகொள்ளக்கூடும் என்றும் நியூயார்க்கில் கூறப்பட்டது. அது உண்மையாகலாம் என்று, லண்டனிலுள்ள பிரபல ஜப்பானியரொருவர் கூறுகின்றார். யுத்த ஆரம்பத்திலிருந்து ஜப்பானியப்பத்திரிகைகள் ‘‘ஜப்பான் உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்ட இடைவிடாது ஈடுபட்டிருக்கும் என்றும், கிழக்கு ஆசியா தேசத்தில் ஒரு புதிய சமுதாய திட்டத்தை நிர்மாணிக்கப்போகிறதென்றும்’’ கூறியது கவனிக்கத்தக்கது.

அமெரிக்காவும், பிரிட்டனும் ரஷ்ய அரங்கங்களை யுத்ததளங்களாக உபயோகிக்கக்கூடுமென்றும் அப்போது ஜப்பானின் தற்காப்பிற்குக் கேடுவிளையும் என்றபயம் ஜப்பானுக்கு ஒருபுரம் இருந்துவருகிறது. ஆகையினால் ஜப்பான் ஜர்மனியுடன் சேர்ந்து ரஷ்யாவுடன் யுத்தத்திற்குப் போவதற்குப்பதிலாக, தெற்கு நோக்கிச்செல்லும் முயற்சியைக் குறைத்துக்கொள்ளும் நிலைமையில் இருக்கிறது. ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு, ரஷ்யாவுடன் போராடுவது இப்போதிருக்கும் நிலைமையில் ஜப்பான் விரும்பவில்லை.

யாதொரு முடிவுக்கும் உடனேவராமல் காலப்போக்கைக் கவனித்துக்கொண்டு பேசாமல் கொஞ்சகாலம் ஜப்பான் இருக்கும் என்று சொல்லலாம்.

நெதர்லாந்து கிழக்கிந்திய தீவுகளின் விஷயமாக ஜப்பானின் நிலைமை என்ன? இந்த இரு நாடுகளின் தொடர்பு அற்றுப்போனது ஜெர்மன் ஸ்தானீகர் காரியாலயத்தின் வேலையென்று தெரிகின்றது. ரஷ்ய-ஜெர்மன் யுத்தம் சங்கடமான நிலைமையை உண்டாக்கிவிட்டது. டச்சு கிழக்கிந்திய தீவுகளை ஜப்பான் எதிர்த்தால், பிரிட்டன் ஹாலந்துதேசத்துடன் சேர்ந்துகொள்ளும் என்று ஜப்பானியர்களிற் பலர் கருதுகின்றனர். டச்சு கிழக்கிந்திய சர்க்கார் ஜர்மனிக்கு சப்ளைகள் அதிகப்படுத்தும் எந்த விதமான ஒப்பந்தத்திற்கும் இணங்க மறுத்துவிட்டார்கள். நிலைமை விளக்கமாக இல்லையாகையால் ஜப்பான் இப்போது மௌன நிலையிலிருக்கின்றது. இந்தியா, ஆஸ்திரேலியா, இரான், இராக், சாடி அரேபியா, ரஷ்யாவில் யூரால்மலைகளுக்குக் கிழக்கேயுள்ள பிரதேசம், ஆகியவைகளின் மீது ஜப்பானுக்குள்ள செல்வாக்கை, இத்தாலியும் ஜெர்மனியும் ஏன் ஒத்துக்கொள்ளவில்லை என்று ஜெர்மனியின் பேராசைகளைப் பற்றி எழுதிய ஒரு ஜப்பானியப் பத்திரிகை கேட்கின்றது. இதிலிருந்து ஆசியதேசப் பகுதியிலுள்ள ரஷ்யாவின்மீது, ஜெர்மனிக்கு உண்டான பேராசைகளைக் கண்டு, ஜப்பான் சங்கடப்பட்டுக்கொண்டிருப்பது நன்றாகத் தெரிகின்றது.

## சிரியாவில் நேச தேசத்தினர் முன்னேற்றம்.

காமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், பிரிட்டிஷ் துருப்புகள் சிரியாவைக் கைவசப்படுத்தவேண்டுமென்றும், ராணுவ சம்பந்தமாகத்தான் இதைச் செய்யவேண்டுமென்றும், கூறியதை, நேசதேச ராணுவத் தலைவர்கள் பின்பற்றி நடக்கிறார்கள். டமாஸ்கஸைக் கைப்பற்றியதும், வடக்கில் முக்கியமான ஹாம்ஸ் பட்டணம் உடனே தாக்கப்பட்டது. முதலில் சைட்னியாவும், பிறகு நெப்ரக்கும் கைப்பற்றப்பட்டன. நெப்ரக், டமாஸ்கஸிற்கு வடகிழக்கில் ஹாம்ஸிற்குப் பாதிவழியில், 35 மைல் தூரத்திலிருக்கின்றது; கரையோரப் பகுதியில் விஷி துருப்புகள் தடை செய்தபோதிலும், நேசதேசத்தினர் நிதானமாகவும், உறுதியாகவும் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் விமானப் படை பீட்டை இரண்டு தடவை அதிக மும்முரமாகத் தாக்கியிருக்கிறது. பிரிட்டிஷ் படைகள் பல்மைராவைச் சூழ்ந்துகொண்டன; அதன் வீழ்ச்சி கூடிய சீக்கிரம் நேர்வது நிச்சயம்.

விஷித் துருப்புகள் சிரியாவைவிட்டு வெளியேறவேண்டுமென்பது சிரியாவிலுள்ளவர்களுடைய விருப்பம். பீரட்டில் அடிக்கடி கலகங்கள் உண்டுபண்ணுவதிலிருந்து இந்த உண்மை தெரிகிறது. எகிப்தைப்போல சிரியாவிற்கும் சுதந்தரத்தைக் கொடுக்கவேண்டுமென்பதே தங்களுடைய நோக்கம் என்பதை பிரிட்டிஷார் வெளிப்படுத்தியிருக்கின்றனர். சிரிய அரசாங்க மெம்பர்கள் வழக்கம்போல அரசாங்க அலுவல்களைச் செய்ய அனுமதிக்கப்பட்டனர். வியாபாரம், பொருளாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றிக் கூடிய சீக்கிரத்தில் சிரிய அரசாங்கத்துடன் நேசதேசத்தினர் ஆலோசித்து முடிவுசெய்யக்கூடுமென்று தெரிகிறது. மூன்று வாரங்களுக்கு முன் நேசதேசத்தினர் சிரியாவில் பிரவேசித்தபோது, பிரிட்டிஷ் அரசாங்கம் கூறியதாவது: ‘‘ஜெனரல் டீகாலின் (சுயேச்சை பிரஞ்சு துருப்புகளின் தலைவர்) சார்பாக ஜெனரல் காட்ரூக்ஸ், சிரியாவிற்கும், லிபானனிற்கும் சுதந்திரத்தையும், சுயேச்சையையும் உறுதிப்படுத்துவதே தங்களுடைய கோரிக்கை என்றும், அதற்காகவேண்டிய ஒப்பந்த விஷயங்களைப்பற்றிக் கலந்து ஆலோசிக்கப்படுமென்றும் தீர்மானமாகத் தெரிவித்திருக்கின்றார். மேன்மைதங்கிய மன்னரின் அரசாங்கமும் இந்த சுதந்திரப் பிரமாணத்திற்குப் பூரண ஆதரவளிக்கின்றது.’’

முன்பு வர்த்தக போர்ட் தலைவராக இருந்த காப்டன் ஆலிவர்லிட்டில்டன் என்பவரை, மத்திய கிழக்கு அரங்கத்தில் பிரிட்டிஷ் யுத்த மந்திரிசபையின் பிரதிநிதியாகவும், சமஸ்தான மந்திரியாகவும், நியமித்திருப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவிக்கின்றது. இவர் ஈஜிப்டிலுள்ள கெய்ரோவில் தன்னுடைய உத்தியோகத்தை ஒப்புக்கொள்வார். இவர் மத்திய கிழக்கு அரங்கத்திலுள்ள பிரதமதளபதி பார்த்துவந்த அரசாங்க வியவகார சம்பந்தமான வேலைகளைப் பார்த்துக்கொள்வார். இதுவரையில் இந்த அலுவல்கள் எல்லாவற்றையும் ஜெனரல் வேவல் கவனித்து வந்தார். இதனால் இவருக்கு உண்டான கஷ்டத்திற்காக, இந்திய பிரதம தளபதியாகிய ஜெனரல் சர் கிளாட் ஆச்கின்லெக்கை மத்திய கிழக்கு அரங்க பிரதமதளபதியாகவும், தன்னை இந்தியாவின் பிரதம தளபதியாகவும் மாற்றிக்கொள்ள ஒப்புக்கொண்டார்.

## இன்னும் பல இத்தர்லியர்கள் சரணாகதி.

அபிசீனியாவில் இன்னும் சில இத்தாலிய சேனாதிபதிகளிருக்கின்றனர். தங்களுடைய பிரதம தளகர்த்தரைப்போலவே இவர்களும் பிரிட்டிஷ், சாம்ராஜ்ய துருப்புகளுக்குச் சரணமடைந்தார்கள். இவர்களைச் சேர்ந்தவர் இத்தாலிய சேனாதிபதி பார்டெல்லோ என்பவர். இவர் சோமாலிலண்டில் (ஆப்பிரிக்காவில் உள்ளது) இத்தாலிய துருப்புகளின் தலைவராக இருந்தவர். பிரிட்டிஷ் துருப்புகள் கிம்பியைக் கைப்பற்றியதும் இவர் சரணடைந்தார். இவருடன் ஒரு இத்தாலிய படைத்தலைவர், (‘பிரிகேடியர்’) 245 ராணுவ உத்யோகஸ்தர்கள், 1941 இதர உத்யோகஸ்தர்கள் 841 அஸ்காரிகள், சரணமடைந்ததும் கைதியாக்கப்பட்டார்கள். அபிசீனியா முழுவதும் இப்போது பிரிட்டிஷார் ஆதிக்கத்திலிருக்கின்றது. துராக்கிருதமாக முசலோனிக்குக் கிடைத்த இந்த சாம்ராஜ்யத்தை வென்றதற்கு உதவியாயிருந்தவர்கள் ஜெனரல் வேவலும் ஜெனரல் கன்னிங்ஹாமும் தான்.

லிபியாவில் விசேஷ நிகழ்ச்சிகள் ஒன்றுமில்லை. பிரிட்டிஷ் விமானப்படை காவல் காத்துக்கொண்டிருக்கின்றது. இந்த வாரத்தில் பெங்காசியும் திரிபோலியும் பலமாகத் தாக்கப்பட்டன. விரோதிகளின் கப்பல்கள் தகர்த்து எறியப்பட்டன; விரோதி விமானங்கள் அழிக்கப்பட்டன. ஜெர்மனி ரஷ்யாவுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் சிரிநெய்கா (ஆப்பிரிக்காவில் உள்ளது) மீது பிரிட்டிஷ் துருப்புகள் படையெடுக்கும் என்று ராய்ட்டர் ராணுவ நிருபர் கூறுகிறார்.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.